**மதவாச்சி பிரதேச சபை**
**அநுராதபுரம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 21 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மதவாச்சிபிரதேச சபையின்2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) மீளாய்வாண்டிற்காக முன்னைய ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 42,562 வீதவரி வருமானம் மீளாய்வாண்டில் வீதவரி வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யாத காரணத்தினால் மிகை அப்பெறுமதியினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 17 வீதிகளை அமைப்பதற்காக உள்ளூராட்சி மன்றத் திணைக்களத்திடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 2,334,658 தொகை நிர்மாண கடன்பட்டோராக கணக்கீடு செய்யப்படாத காரணத்தினால் கடன்பட்டோர் மற்றும் மூலதன வருமானம் அப்பெறுமதியினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 49,310 ஆன நூலகப் புத்தகங்கள் கணக்கீடு செய்யப்படாத காரணத்தினால் நிலையான சொத்துக்கள் அப்பெறுமதியினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அபிவிருத்தி செயற்திட்டத்தினை நிறைவேற்றுவதற்காக கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய ரூபா 987,092 ஆன பெறுமதி கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது.

(உ) சமய நிறுவனங்கள் மற்றும் சமயப் பாடசாலை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 3 செயற்திட்டங்களுக்கான 10 சதவீத நிறுத்தி வைத்தல் ரூபா 30,000 கடன்பட்டோராக இனங்காணப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் கடன்பட்டோர் அப்பெறுமதியினால் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மாகாண அபிவிருத்தி மானியங்களின் கீழ் மீளாய்வாண்டின் வேலை பூர்த்தி செய்யப்பட்டு 2018 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,960,708 பெறுமதியான 04 செயற்திட்டங்களுக்காக செலுத்த வேண்டிய மற்றும் பெறவேண்டிய தொகை கணக்கீடு செய்ததன் காரணத்தினால் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மாகாண சபை பண்முகப்படுத்தப்பட்ட நிதியத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட 15 செயற்திட்டங்களின் கீழான ரூபா 180,267 தொகையான நிறுத்தி வைக்கப்பட்ட

தொகை கடன் கொடுத்தோராககணக்கீடு செய்ததன் காரணத்தினால் கடன் கொடுத்தோர் அப்பெறுமதியினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) புதிய வியாபார வர்த்தக தொகுதியின் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி பிணை வைப்பு ரூபா 798,000 நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) பிரதேச சபை பலப்படுத்தல் செயற்திட்டத்தின் கீழ் நவீனமயப்படுத்தப்பட்ட ரூபா 7,621,808 பெறுமதியான நிர்மாணம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

---

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 05 கணக்கு விடயங்களுக்குரிய ஆவணங்களில் காண்பிக்கப்படும் பெறுமதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் பெறுமதிகளுக்கு இடையே ரூபா 10,921,223 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

---

**பெற வேண்டிய கணக்குகள்**

---

வருடக் கணக்காக முன்கொண்டு வரப்படும் ரூபா 18,672,035 கூட்டுத்தொகையான பெறவேண்டிய 08 கணக்கு மீதிகளை மீளாய்வாண்டிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**செலுத்த வேண்டிய கணக்குகள்**

---

2009 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்தும்2017 வரை பேணிச் சென்ற ரூபா 1,585,762 செலுத்த வேண்டிய 08 கணக்கு மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான தேவைவான எழுத்துமூல சான்றுகளின்மை**

---

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக ரூபா 85,568,402 கூட்டுத்தொகையான 16 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

**1.3.5 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

---

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 177 ஆம் பிரிவு | சபையின் சேவை புரியும் தற்காலிக மற்றும் அமைய ஊழியர்களுக்காக பணிக்கொடை கொடுப்பனவிற்காக உத்தேச திட்டமொன்றை தாபிப்பதற்கு உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | சபை பயன்படுத்தும் கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 1994 ஆகஸ்ட் 04 ஆந் திகதிய உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் NCP/LG/4/7/19 ஆம் இலக்க சுற்றறிக்கை | பிரதான மதிப்பாளரின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு அறை வாடகை தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும் சபை 22 ஆண்டுகளாக அறை வாடகை மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

---------------------

### 2.1 நிதி விளைவுகள்

--------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம்,2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானமீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 8,136,497ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 8,585,846 ஆக இருந்தது.

## 2.2 வருமானநிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டியலிடப்பட்ட வருமானம். சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2017 சனவரி 01 இல் ஆரம்ப மீதி பெறுமதி | 2017 இல் பட்டியலிடப் பட்ட வருமானம் பெறுமதி | 2017இல் சேகரிக்கப்பட்ட வருமானம் 2017.01.01 மீதியில் பெறுகை பெறுமதி | 2017 பட்டியலிடப்பட்டது காசாக பெறுமதி | 2017 திசெம்பர் 31 இல் நிலுவை வருமானம் பெறுமதி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 1,064,057 | 859,559 | 169,018 | 592,167 | 1,162,431 |
| கடை வாடகை | 106,050 | 854,400 | 48,300 | 746,000 | 166,150 |
| அனுமதிப் பத்திரங்கள் | 505,700 | 1,450,000 | - | 2,234,630 | 505,700 |
| குத்தகை வாடகை | 1,120,994 | 5,772,700 | - | 5,772,700 | 1,120,994 |
| மொத்தம் | 2,796,801 | 8,936,659 | 217,318 | 9,345,497 | 2,955,275 |

**2.2.2 வருமான சேகரிக்கும் செயலாற்றல்**

**(அ) வீத வரி**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,115,096 தொகையான நிலுவை வீதவரியை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) வியாபார அனுமதிப்பத்திரம்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் ரூபா 505,700 ஆன மீதியிலிருந்து ரூபா 489,700 தொகை 2008 ஆம் ஆண்டிலிருந்து நிலவி வருவதுடன் அம்மீதிகளை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(இ) முத்திரைக் கட்டணங்கள்**

2018 மார் 15 ஆந் திகதி வரை மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய நிலுவை முத்திரைக் கட்டணங்கள் ரூபா 1,910,961 ஆக இருந்தது.

**(ஈ) நீதிமன்றத் தண்டப்பணம்**

2018 மார் 15 ஆந் திகதி வரை மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,454,590 ஆக இருந்தது.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம்,பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) உப விதிகள்**

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 28 பிரதான காரணங்களை நிறைவேற்றுவதற்காக 1952 இன் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற நிறுவனம் நிறைவேற்றப்பட்ட உதவி உப உறுப்புரை சட்டம் 1999 மார்ச் 19 ஆந் திகதிய 1072 ஆம் இலக்க வர்த்தமானி பத்திரத்தின் மூலம் பின்பற்ற போதிலும், உப உறுப்புரைகளில் குறிப்பிட்ட இலக்குகளை செயல்ரீதியாக நடைமுறைப்படுத்தியிருக்கவில்லை.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

சபையினால் மீளாய்வாண்டில் நிறைவேற்ற வேண்டிய செயற்பாடுகளுக்காக செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) சுற்றாடல் பிரச்சினைகள்**

சபையினால் மீள் சுழற்சி நிகழ்ச்சித்திட்டம் செய்றபடுத்தப்பட்டிருந்த போதிலும், பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

i கழிவுப் பொருட்களை சேகரித்தல் மற்றும் வகைப்படுத்தல் தொடர்பான பொதுமக்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்படாதிருந்தமையால் சேகரிக்கும் கழிவுப்பொருட்கள் வகைப்படுத்தப்படாமல் பொது இடங்களில் விடப்பட்டிருந்தது.

ii பிளாஸ்ரிக், கண்ணாடி மற்றும் பொலித்தீன் போன்ற உக்கலடையாத மற்றும் கழிவுப்பொருட்கள் மீள்சுழற்சிப்படுத்தபடாமல் இசின்பெஸ்ஸகல காட்டில் விடுவதாக அவதானிக்கப்பட்டது.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி**

ஐக்கிய நாடுகளின் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சிநிரல் தொடர்பாக மீளாய்வாண்டில் சபை அறிந்திராருந்ததுடன் 2018 ஆம் ஆண்டில் அபிவிருத்தி திட்டங்களை தயாரிக்கும் போது 09 நோக்கங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

பிரதேச சபை சட்டத்தின் 171 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபை நிதியம் மற்றும் ஆதனங்கள் நிர்வகிப்பதற்காக வழிகாட்டி கோவையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 மனித வள முகாமை**

1995 முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இடமாற்றம் பெற்றுச்சென்ற,மரணித்த, ஓய்வுபெற்ற மற்றும் சேவையை விட்டுச் சென்ற 12 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 194,593 தொகையான ஊழியர் கடன் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பிரதேச சபை சட்டத்தின் 168 ஆம் பிரிவின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட பாதீடுமுறையான எதிர்வுகூறல் ஒன்றுடன் தயாரிக்கப்படாத காரணத்தினால் பாதிடப்பட்ட வருமானத்திற்கும் செலவினத்திற்கும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுடன் ஒப்பிடும் போது 09 சதவீதத்திலிருந்து 330 சதவீதம் வரையான விலகலொன்று காணடுவதாக அவதானிக்கப்பட்டது.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

2015 மார்ச் 18 ஆந் திகதிய 04/2015 ஆம் இலக்க வடமேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரது சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | கணக்கேடுகள் மற்றும் பதிவேடுகள் நாளதுவரையாக பேணப்படாமை. |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் | i நிலையான சொத்துக்கள் முறையாக கணக்கீடு செய்யப்படாமை<br>ii மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாமை<br>iii. சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை |
| (இ) | உள்ளகக் கட்டுப்பாடு | உள்ளகக் கணக்காய்வ மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களை செயற்படுத்தாமை |